**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண். 127 /2022**

PW1 – திருமதி.செல்வி நாள். 03.07.2025

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்., பி.பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (உதவியாளர்) திரு,அழகர்சாமி என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் பிறந்த ஊர் என்னவென்றால் வேளாவயல் ஆகும். எனது கணவர் ஆறுமுகம் எங்களுக்குள் திருமணம் ஆன பின்பு தான் உறவு என்றாலும் அதற்கு முன் உறவு முறை இல்லை என்றாலும் சரிதான். இராமையாதேவரின் சொத்துக்களின் விவரத்தை குறித்து எனக்கு மேற்படி ஆறுமுகத்துடன் திருமணம் ஆன பின்பு தான் தெரியும் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 35 வருடங்கள் ஆகிவிட்டன. பொதுவாக கிராமங்களில் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொள்வது வழக்கம் என்றால் சரிதான். கிராம வழக்கப்படி தான் இராமையாதேவரின் சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். இராமையாத்தேவரின் சொத்துக்களை அவருடைய வாரிசுகள் வாய்மொழியாக பாகம்பிரித்துக் கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, திருமணம் ஆன பிறகு தான் நான் தெரிந்து கொண்டேன்.

2. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் தந்தையாகிய தங்கவேலு என்பவரின் பெயரில் தான் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன் பின் தற்போது 1ம் பிரதிவாதியாகிய விவேகானந்தன் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் மூன்று வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். எனது கணவர்

உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எங்களுக்கு அப்போது பட்டா ஏற்பட்ட விவரம் தெரியாது, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 04.10.1983 ம் வருடம் இராமையாத்தேவரின் சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை செய்து கொண்டதாகவும் அது சம்பந்தமாக பாகபத்திரம் எழுதிக் கொண்டதாகவும் சொல்லி உள்ளது தவறு என்றும் மேற்படி ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 04.10.1983 ம் வருடம் இராமையாத்தேவரின் சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை செய்து கொண்டதாக சொல்லி இருப்பது தவறு என்றும் அதன் பின் தான் இராமையாத்தேவரும் அவரது வாரிசுகளும் வாய்மொழியாக பாகம்பிரித்து கொண்டனர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 04.10.1983 ம் தேதி பாகபிரிவினை செய்து கொண்டதற்கான ஆவணத்தின் மூலமாக எனது கணவருக்கோ எனக்கோ தாவா சொத்தில் எந்த உரிமையும் ஏற்படக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள 04.10.1983 ம் தேதி பாகபிரிவினை செய்து கொண்டதற்கான ஆவணத்தில் உள்ள கையெழுத்தான இராமையாத்தேவர், ஆறுமுகம், சுப்பிரமணி மற்றும் தங்கவேலு ஆகிய கையெழுத்துக்கள் அவருடைய கையெழுத்து இல்லை என்றும் என்னால் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது கணவர் எந்த காலத்திலும் பாத்தியமோ அனுபவமோ செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மறைந்த பிறகு நானும் 2 மற்றும் 3 வாதிகளும் தாவா சொத்தை பொறுத்து அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை அளந்ததாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான்.

5. 2 ம் பிரதிவாதியாகிய சிவலிங்கம் 1 ம் பிரதிவாதிக்கு பணம்கொடுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்ட பிறகு தான் மேற்படி தாவா சொத்தை பிரதிவாதிகள்

அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து தொண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்றிதழ் பெற்றதாக நான் சொல்லி இருக்கிறேன் மேற்படி வில்லங்க சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி வில்லங்க சான்றிதழை நான் எப்போது பெற்றேன் என்றால் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு. தாவா சொத்தை பொறுத்து 3 வருடத்திற்கு முன்பு தான் வில்லங்க சான்றிதழ் பெற்றுப் பார்த்தேன் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. தங்கவேலுவிடமிருந்து 3ம் வாதியாகிய வினோதினி சில சொத்துக்களை கிரையம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். எங்களுக்குரிய பங்கை தான் நாங்கள் 3ம் வாதி கிரையம் பெற்றார். 3ம் வாதி தங்கவேலுவிடமிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்பு மேற்படி கிரையம்பெற்றார் என்றால் சுமார் 3 வருடங்கள் இருக்கும். மேற்படி 3ம் வாதி கிரையம் பெற்ற பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் ஏற்கனவே கொடுத்துவிட்டேன். மேற்படி கிரைய ஆவணத்தில் தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதி பேஸ்மட்டமாகவும் ஒரு பகுதி காலியிடமாகவும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் பேஸ்மட்டமாக உள்ள பகுதியின் மதிப்பு சுமார் 5 லட்சம் இருக்கும் என்றால் சரிதான். தாவா பிராதின் சொத்து விபரத்தில் தாவா சொத்தில் கட்டுமானம் உள்ளது என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லி இருக்கிறேன். மேற்படி தாவா சொத்தில் உள்ள கட்டுமான விவரத்தை நான் பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. தங்கவேலு தனது பாக சொத்தை 1ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். எங்களது பங்கு சொத்தையும் சேர்த்து எழுதிக் கொடுத்துவிட்டார். தாவா சொத்தில் கட்டப்பட்டுள்ள பேஸ்மட்டமானது 1பிரதிவாதியால் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நாங்கள் தான் பேஸ்மட்டத்தை

கட்டினோம். அவரது பகுதி காலி இடமாக உள்ளது. 18 செண்ட்டில் பேஸ்மட்டம் அமைக்க வேண்டும் என்றால் 20 லட்சம் ரூபாய் செலவாகும் என்றால் 18 செண்டில் 28X27 என்ற அளவிற்கு மட்டும் தான் பேஸ்மட்டம் கட்டி உள்ளோம். மீதம் உள்ள இடத்தில் விவசாயம் செய்து வருகிறோம். தாவா சொத்தின் மொத்த அளவு 36 செண்ட் பேஸ்மட்டம் எழுப்பட்டுள்ள பகுதி நீங்கலாக மீதம் உள்ள அனைத்து பகுதிகளிலும் விவசாயம் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான், வரப்பு அமைந்துள்ளது. தாவா சொத்து உள்ளிட்ட மொத்த அளவான 36 செண்டடில் எனது கணவருக்கு எந்த விதமான பங்கும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தங்கவேலு 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த இனாம்செட்டில்மெண்ட் பத்திரம் பெயரளவில் ஏற்படுத்தவில்லை என்றும் அன்பின் மிகுதியால் ஏற்படுத்தி கொடுத்தது என்றால் சரியல்ல. மேற்படி இனாம்செட்டில்மெண்டை பொறுத்து தாவா சொத்தை முழுவதுமாக 1ம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தனக்கு பாத்தியமான மொத்த சொத்தையும் விற்பதற்கு முழு உரிமை உள்ளது என்றும் அதன் பெயரில் தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆகையால் மேற்படி 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடியதாகும் என்றால் சரியல்ல. நான் வழக்கில் வா.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை பத்திரமானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருவாடானை